**ஹம்பாந்தோட்டை மாநகர சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமு உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஹம்பாந்தோட்டை பொது நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 2,733,162 தொகைக்கான கணினிகளும் துணைக் கருவிகளும் மற்றும் வலைத்தள உபகரணங்கள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | நிலையான சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது அறவீடு செய்யப்பட்ட ரூபா 1,912,900 தொகைக்கான ஒரே தடவையில் பெறும் பணத்தினை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யாமல் பாதுகாப்பு பிணை வைப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 05 வருடங்களை மிகைத்துள்ள ஒரே தடவையில் பெறும் பணத்தினை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | வருமானம் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ருஹுனு பிலாஸா வர்த்தக தொடர் கட்டிடத்தில் அமைந்துள்ள 02 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 785,000 தொகைக்கான ஒரே தடவையில் பெறும் | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | வருமானம் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு புலனாகாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 256,250 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | புலனாகாத சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு காணப்பட்ட ரூபா 97,500 இற்கான சேதனப் பசளை இருப்பு, கையிருப்பு என கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | இருப்பினை சொத்தொன்றென கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 94,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டது என. | வருமானம் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **மாநகர சபை கட்டளைச் சட்டம்** | | | |
| | i. பிரிவு 247 இ(1)(1அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உயர்தொழில் நடாத்தும் ஆட்களிடம் இருந்து கட்டணம் ஒன்று அறவீடு செய்ய முடியுமாக இருந்த போதிலும் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வரும் மருத்துவ, நொத்தாரிஸ் மற்றும் ரெஜிஸ்டார் ஆகிய உயர் தொழில் செய்வோரிடம் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உயர்தொழில் வரி அறவீடு செய்வதற்காக ஆளுனரில் அங்கீகாரம் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | ii. பிரிவு 272 | 32 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை சட்டங்கள் சட்ட ஆக்கஞ் செய்ய வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் 30 விடயங்களுக்காக மாத்திரம் துணைச் சட்டம் சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேவைப்பாட்டின் மீது உரிய சட்டங்கள் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | கூட்டுத்தொகை ரூபா 1,864,424 தொகைக்கான 02 வருடங்களை மிகைத்திருந்த திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் 151 இனை ஆதன அழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்பு மீதிகள் வைப்புத் தொகைகளை ஆதன அழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 15,404,146 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,972,623 தொகையாகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 12,736,600 | 13,408,278 | 12,395,219 | 6,681,072 | 11,410,540 | 12,095,626 | 9,584,967 | 5,668,013 |
| வாடகை | 35,723,700 | 36,718,866 | 37,387,859 | 2,890,140 | 32,744,835 | 35,201,652 | 28,875,896 | 3,559,133 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,470,000 | 4,999,700 | 3,682,523 | 2,756,023 | 3,880,500 | 2,827,323 | 2,084,947 | 1,438,846 |
| ஏனைய வருமானங்கள் | 6,132,400 | 7,846,829 | 6,919,199 | 2,289,527 | 3,932,350 | 6,397,996 | 6,338,424 | 1,361,897 |
| **மொத்தம்** | **58,062,700** | **62,973,673** | **60,384,800** | **14,616,762** | **51,968,225** | **56,522,597** | **46,884,234** | **12,027,889** |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 5940 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 5,589,076 தொகை வீதவரியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252 இற்கு இணங்க நிலுவைத் தொகை ரூபா 10,000 இற்கு மிகையான 45 ஆதன உரிமையாளர்களிடம் பெற வேண்டிய வீதவரி ரூபா 1,480,103 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களை தடை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 69 நிறுவனங்களில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய குப்பை வரி ரூபா 570,796 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 231 வியாபார மற்றும் கைத்தொழில் வரி அலகுகளிலிருந்து பெற வேண்டிய ரூபா 508,200 இற்கான வியாபார மற்றும் கைத்தொழில் வரியை அறவீடு செய்வதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(ஆ)4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | சபையின் வாடகையாளருடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைக்கு இணக்கமின்றி சபைக்கு சொந்தமான 03 கடையறைகள் 2017, 2019 மற்றும் 2022 ஆண்டுகளின் போது துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு துணை வாடகைக்கு கொடுப்பதை தடுப்பதற்காக சபையினால் முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த காடையறைகளை எதிர் காலத்தில் சீல் வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான கடையறைகள் மற்றும் கட்டிடங்கள் வாடகைக்கு கொடுக்கும் போது 47 அலகுகளில் இருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 2,383,785 தொகை மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 253(1) இற்கு இணங்க அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 506,355 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு ஞாபகப்படுத்தும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி அனைத்து உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 20 கடையறைகள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்காததுடன், உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்படாத கால வீச்சில் வருடங்கள் 03 இற்கும் 35 இற்கும் இடைப்பட்டிருந்தது. | ஒரு கடையறையை சீல் வைப்பதற்கும் மற்றும் மீதியான கடையறைகளை நாளதுவரை ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 183 வர்த்தக அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 464,500 இற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(ஆ) 4 இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு வருடத்தை விட மிகையான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய விளம்பரப் பலகைக் கட்டணம் ரூபா 2,225,033 தொகை அறவீடு | ரூபா 2,119,033 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஓ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எழுத்தாணைக் கட்டணம், தண்ட வட்டி மற்றும் சேவைகளுக்கான கட்டணம் முறையே ரூபா 820,614 தொகை, ரூபா 743,320 தொகை மற்றும் ரூபா 333,835 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை எதிர் காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 611,807 தொகை மற்றும் ரூபா 2,069,148 தொகை ஆகும். | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஜூன் 25 ஆந் திகதிய ஆரம்பிக்கப்பட்ட கவ்ஷிமா இயந்திரத்தின் மூலம் சேதனப் பசளை உற்பத்திற்காக ஒரு நாளைக்காக 30 தொன்களுக்கும் 50 தொன்களுக்கும் இடைப்பட்ட குப்பை தேவைப்பட்ட போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய குப்பைகள் ஒரு தொன் ஆக காணப்பட்டமையால் குப்பை தேவைப்பாட்டினை சேகரித்துக்கொள்வதற்காக சபைக்கு முடியாமல் இருந்ததுடன், அதனை சேகரித்துக்கொள்வதற்காக முறையான செய்முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | அண்மையிலுள்ள பிரதேச சபையினால் குப்பைகள் வழங்கப்படாமை மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனைக்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடல் தோல்வியடைந்ததென. | குப்பைகளை சேகரிப்பதற்காக முறையான செய்முறை ஒன்று தயாரிக்க வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1997 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த சபைக்குச் சொந்தமான | புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகையை அறவீடு செய்ய | வாடகை அறவிடப்பட வேண்டியதுடன், வாடகை |

| | | |
|---|---|---|
| திஸ்ஸ வீதியில் 10 காணிகளுக்காக அறவீடு செய்யப்பட வேண்டிய வாடகை 2016 ஏப்ரல் 12 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வாடகை அறவீடு செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மாதாந்த வாடகை என ரூபா 165 அறவீடு செய்யப்பட்டமையால் 2016 ஏப்ரல் 27 திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 5,508,000 தொகையாக காணப்பட்டது. அதேபோல், வாடகை நிபந்தனைகளை மீறி இந்தக் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் பெற்றிருந்த வாடகையாளர்களினால் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டு மாதாந்தம் ரூபா 15,000 இற்கும் ரூபா 150,000 இற்கும் இடைப்பட்ட வருமானமொன்றினை முறைசாரா விதமாக உழைத்திருந்தது. | முயற்சி செய்த போதிலும் அறவீடு செய்வதற்கு முடியாமல் போனது எனவும், உடன்படிக்கை மற்றும் துணை விதிகளுக்கு இணங்க எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்தாவிடின் வாடகை உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2020 ஆகஸ்ட் 17 திகதிய ஸீஈ/01/01 இன் படி புதிய வீதி விளக்குகள் பொருத்தும் போது மின்சார சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்படாமையால் மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்புக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,692,048 இற்கான செலவுகளை மீளளிப்பு செய்து கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | பொருத்தப்பட்ட வீதி விளக்குகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு மின்சார சபையினால் அங்கீகாரம் வழங்கியிருக்காததுடன், தற்போது செலவுகளை மீளளிப்புச் செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை என. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபப/பாபாகோ/2010/01 இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி வாடகைத் தொகையை பெறுமதி மதப்பீடு செய்து சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 57 கடையறைகள் மற்றும் காணிகள் தொடர்பாக பழைய வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபை நிதியத்திற்கு | 28 ஆம் இலக்க கடையறையை சீல் வைப்பதற்கும், 10 காணி மற்றும் கடையறைகள் தொடர்பாக புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி எதிர் காலத்தில் உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 12,907,115 தொகையாக இருந்தது. | | |
| (ஆ) | நகர முதல்வர் மற்றும் பிரதி நகர முதல்வர் பதவியணியில் ஏழு பேருக்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட கடமைகள் தொடர்பாக உறுதிப்படுத்தல், கடமையாற்றிய நாட்களின் எண்ணிக்கை, கடமையாற்றிய நேரம் என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் ரூபா 1,274,000 இற்கான படி ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | நிறைவேற்றப்படுகின்ற கடமைகள் தொடர்பாக மற்றும் கடமை நேரங்கள் தொடர்பாக அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 45 ஆவது பிரிவிற்கு இணங்க சபையினால் அனுபவித்து வரும் 81 காணிகள் மற்றும் 08 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டு இறுதியளவிலும், சபையின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்குவதற்காக உரிய நிறுவனங்களுக்கு கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 02 வாகனங்களை திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு வாகனம் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், மீதியான வாகனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இணக்கத்துடன் பின்னர் அப்புறப்படுத்தப்படும் என. | சொத்துக்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரிபோபுர சிறுவர் பூங்கா நிர்மாண வேலையின் கீழ் நிர்மாணிப்பதற்கு தேவையான மண் வெட்டப்பட்டு எடுத்துவருவதற்காக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளரிடம் 600 கியுப் மண் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் 1638 மண் கியுப்கள் வெட்டப்பட்டு எடுத்து வரப்பட்டிருந்தமையால் அங்கீகாரமின்றி வெட்டப்பட்ட மண்ணின் எண்ணிக்கை 1038 கியுப்களாகும். | மண்ணின் தேவையினை பூர்த்தி செய்வதற்காக அடிக்கடி பிரதேச செயலாளருக்கு அறிவித்து கிராம உத்தியோகத்தர் மற்றும் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொடர்பு கொண்டு தேவையான மண் எண்ணிக்கை வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட மண் கியுப்களின் எண்ணிக்கை மிகைத்து மண் வெட்டப்படக் கூடாது. |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியில் காணப்பட்ட 04 பதவிகளுக்குரிய 08 ஊழியர் மிகைகளை முறைப்படுத்திக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | மிகைகளை முறைப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் 23 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக ஏனைய கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். | சேவையின் தேவைப்பட்டின் மீது ஆரம்ப மட்டத்திலுள்ள ஊழியர்களை ஈடுபடுத்தி அலுவலகக் கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | ஊழியர்களை அனுமதிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (இ) | சேவையை விட்டுச்சென்ற ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 212,450 தொகைக்கான விழா, விஷேட மற்றும் இடர் கடன் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |